Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 68/2020**

**Deposition of PW.1 (LW.2)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிச்சை | ஜாதி | : | |
| த/பெ | : | கணக்கன் | தொழில் | : | வனச்சரக அலுவலர், ஓய்வு |
| கிராமம் | : | கிலாதிரி | சமயம் | : | |
| தாலுகா | : | சிவகங்கை | வயது | : | 75/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.05.2026.

(1, 2, 3, 4, 5, 7, 9, 10, 11 எதிரிகள் ஆஜர். 14வது எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது . 6, 8, 12, 13 எதிரிகள் இறந்துவிட்டனர்.)

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு அரசு வனத்துறையின் வனச்சரக அலுவலராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்சமயம் சிவகங்கை மாவட்டம், கிலாதிரி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். என்னுடன் வேலை செய்தும், எனக்கு அதிகாரியாக வனச்சரக அலுவலராக வேலை பார்த்த பட்டியல் சாட்சி-1 திரு. வடிவேல் தற்போது இறந்துவிட்டார். கடந்த 2004 ஆம் ஆண்டு கன்னிவாடி சரகத்தில் வனவராக பணியாற்றினேன். 27.02.2004 அன்று கன்னிவாடியை சேர்ந்த திருமலைச்சாமி ரெட்டியார் மகன் ராஜாராம் என்பவர், புகார் மனுவை கொண்டு வந்து வனச்சரக அலுவலரிடம் கொடுத்தார். அந்த புகார் மனுவில் ராஜாராம் என்பவருக்கு சொந்தமாக தோணிமலை பகுதியில் உள்ள பட்டா நிலத்தில் இயற்கையாக வளர்ந்த தோதகத்தி மரங்களை சில அடையாளம் தெரியாதவர்கள்

வெட்டிக்கொண்டிருப்பதாகவும், தோட்டக் காவலாளி தெய்வேந்திரன் என்பவர் மூலம் தனக்கு தெரிய வந்ததாகவும், மேற்படி குற்றவாளிகளை கைது செய்து நடவடிக்கை எடுக்கும் படி மனு கொடுத்தார்.

அந்த மனுவின் பேரில் வனச்சரக அலுவலர் அவர்கள் பிச்சையாகிய என் தலைமையில் தனிக்குழு அமைத்து தோட்டத்தை தணிக்கை செய்து குற்றத்தை கண்டுபிடித்து வரும்படி உத்தரவிட்டார். உடனே என் தலைமையில் கன்னிவாடி சரக வனப்பணியாளர்கள் தோட்ட உரிமையாளர் ராஜாராம், தோட்ட காவலாளி தெய்வேந்திரன் ஆகியோருடன் ராஜாராமுக்கு சொந்தமான அந்த நிலத்திற்கு சென்று தணிக்கை செய்தபோது, 7 நபர்கள் தோதகத்தி மரங்களை வெட்டி செதுக்கி கொண்டிருந்தார்கள். என் தலைமையில் சென்ற வனப்பணியாளர்கள் சுற்றி வளைத்து 7 பேரையும் தங்கள் பொறுப்பில் வைத்துக்கொண்டு, ஒவ்வொருவரிடமும் தனித்தனியாக குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களை தங்களுடைய பொறுப்பில் வைத்துக்கொண்டு வெட்டப்பட்ட மரங்களின் அளவுகளை செம்பட்டி வனவர் மகேந்திரன் அவர்கள் அளவுகள் எடுக்க, கன்னிவாடி பீட் வனக்காவலர் சாமிக்கண்ணு பெயிண்ட்டால் எண்கள் இடப்பட்டது. மேற்படி அளவுகளை நான் பதிவு செய்தேன். மீண்டும் வனச்சரக அலுவலர் அவர்களின் உத்தரவுப்படி கைப்பற்றப்பட்ட 28 செதுக்கப்பட்ட கட்டைகள் மற்றும் 2 உருட்டு கட்டைகளையும் தோட்ட உரிமையாளரிடம் ஒப்படைத்து தனித்தாளில் ஒப்புதல் பெறப்பட்டது. பார்வைமகஜர் என்னால் தயார் செய்யப்பட்டது. அந்த பார்வைமகஜர் **(அ.சா.ஆ.1/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட 2 கோடாரிகள், 2 ரம்பம், ஒரு வெட்டருவாள் ஆகியவற்றை கைப்பற்றி கன்னிவாடி பீட் வனக்காப்பாளர் சேர்வராயன் அவர்கள் H.நமுனா தயார் செய்தார். நான் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை ராமகிருஷ்ணன் என்பவரிடம் பெற்றேன். அந்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் (**அ.சா.ஆ.2/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிடிபட்டவர்களையும், பிடிபட்ட பொருட்களையும் சிரங்காடு கிராம நிர்வாக அலுவலக உதவியாளர் திரு. தண்டபாணி அவர்களிடம் ஒப்புவித்து, ஒப்புதல் பெற்று மேல்நடவடிக்கைக்காக திரும்ப பெறப்பட்டது. மீண்டும் பிடிபட்டவர்களையும், பிடிபொருட்களையும் வனச்சரக அலுவலர் முன்பு ஆஜர் படுத்தினேன். வனச்சரக அலுவலர் அவர்கள் மரம் வெட்டிய நபர்களிடம் தனித்தனியாக விசாரணை செய்தார். அந்த விசாரணையின் பேரில் தும்மலப்பட்டியில் வசிக்கும் சரவணக்குமார் என்பவரை 27.02.2004 அன்று இரவு 11.00 மணிக்கு செம்பட்டி பிரிவு வனவர் மகேந்திரன் என்பவர் கைது செய்து, ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார். வனச்சரக அலுவலர் விசாரணையின் படி கன்னிவாடியை சேர்ந்த முனியாண்டி என்பவரை 27.02.2004 அன்று என் தலைமையில் அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டார். அவரிடம் கோட்டைவெளி பீட் வனக்காப்பாளர் அப்பச்சி அவர்கள் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார்.

மீண்டும் 11.00 மணி அளவில் கன்னிவாடியை சேர்ந்த பாண்டி என்பவரை கைது செய்து வில்லியம் பிரான்சிஸ் என்ற வனக்காப்பாளர் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார். பிடிபட்ட அனைவரையும் வனச்சரக அலுவலகத்தில் பாதுகாப்பாக இரவு முழுவதும் வைத்திருக்கப்பட்டார்கள். மறுநாள் 28.02.2004 அன்று காலையில் என் தலைமையில் ஒட்டன்சத்திரம் சென்று முருகபாண்டி என்பவரை கைது செய்து வனச்சரக அலுவலகம் கொண்டுவரப்பட்டார். வனச்சரக அலுவலகத்தில் என் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. 28.02.2004 அன்று பிற்பகல் 11 நபர்களையும் கன்னிவாடி பீட் வனக்காப்பாளர் சேர்வராயன் குற்ற அறிக்கை தயார் செய்து, திண்டுக்கல் குற்றவியல் நீதிமன்றம் எண்.2 ல் நீதிபதி முன்பு ஆஜர் படுத்தப்பட்டு எதிரிகள் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

மறுநாள் 29.02.2004 அன்று வனச்சரக அலுவலர் உத்தரவின் பேரில் 7 மரங்கள் வெட்டப்பட்ட அதே இடத்தை தணிக்கை செய்து வெட்டப்பட்ட மரங்கள்

விடுபட்டுள்ளதா என்று பார்க்கும்போது இரண்டு கிளை மர துண்டுகள் விடுபட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டு அதற்கு எண்கள் இடப்பட்டு, வனச்சரக அலுவலரின் உத்தரவின் படி 2 கட்டைகளையும் நில உரிமையாளர் திரு. ராஜாராம் அவர்களிடம் ஒப்படைத்து ஒப்புதல் தனித்தாளில் பெறப்பட்டது. 02.05.2004 அன்று என் கட்டுப்பாட்டில் இருந்த கன்னிவாடி ரிசர்வ் லேண்டில் நானும், சேர்வராயன் அவர்களும், வன்காவலர் சாமிக்கண்ணு அவர்களும் சுற்றி வந்தபோது, கோம்பை சராக பகுதியில் 5 தோதகத்தி செதுக்கிய கட்டைகள் புதர்க்குள் மறைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அந்த கட்டைகளுக்கும் அளவு எடுக்கப்பட்டு, எண்ணிடப்பட்டு 5 கட்டைகளையும் கன்னிவாடி சிரங்காடு கிராம நிர்வாக அலுவலக உதவியாளர் திரு. தண்டபாணி அவர்களிடம் ஒப்படைத்து, H.நமுனா பெறப்பட்டது. அந்த H.நமுனா (**அ.சா.ஆ.3/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த 5 கட்டைகளையும் வனச்சரகர் முன்பு ஒப்படைக்கப்பட்டது.

சிறையில் அடைக்கப்பட்டிருந்த நபர்கள் நிபந்தனை ஜாமினில் வெளியே வந்து கன்னிவாடி வனச்சரக அலுவலகத்திற்கு கையெழுத்து செய்ய வரும்போது, வனச்சரக அலுவலர் மேற்படி நபர்களிடம் விசாரணை செய்தார். 27.02.2004 அன்று வெட்டப்பட்ட தோதகத்தி மரக்கட்டைகளில் 5 ஐ கைது செய்யப்பட்ட முருகேசன் என்பவர் 26.02.2004 அன்று கீழே கொண்டு வந்து மறைத்து வைத்ததாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலம் என்னால் பதிவு செய்யப்பட்டது. அந்த ஒப்புதல் வாக்குமூலம் (**அ.சா.ஆ.4/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி 5 கட்டைகளும் STOR 1/2004 வழக்கில் சம்மந்தப்பட்டவை என்பது தெரிந்து மேற்படி 5 கட்டைகளையும் நில உரிமையாளர் திரு. ராஜாராமிடம் ஒப்புவித்து, தனித்தாளில் ஒப்புதல் பெறப்பட்டது. அந்த ஒப்புதல் தாள் (**அ.சா.ஆ.5/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த குற்றத்தின் குற்ற அறிக்கையை கன்னிவாடி பீட் வனக்காப்பாளர் சேர்வராயன் அவர்கள் தயாரித்து

வனவர் என் மூலமாக மேல்நடவடிக்கைக்காக கன்னிவாடி வனச்சரக அலுவலர் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

**1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

உங்களுக்கு இந்த வழக்கு சம்மந்தமாக யார், எத்தனை மணிக்கு தகவல் தெரிவித்தார்கள் என்றால் நான் நர்சரியில் இருந்தேன். அங்கிருந்த பிளாக் வாட்சர் அல்லது நர்சரி வாட்சர் என்று நினைக்கிறேன். அவர்கள் வந்து கூறியதன் கூறியதன் பேரில் எனக்கு தெரியும். அவர்கள் மதியம் 12.30–01.00 மணியைபோல என்னிடம் தகவல் சொன்னார்கள். தகவல் சொன்னபோது நீங்கள் எங்கு இருந்தீர்கள் என்றால் கன்னிவாடி பிரிவில் வனவராக பணியில் இருந்தேன். நீங்கள் வனச்சரக அலுவலத்திற்கு சென்ற போது எத்தனை நபர்கள் இருந்தர்கள் என்றால் 4, 5 நபர்கள் இருந்தார்கள். நீங்கள் தகவல் கிடைத்தவுடன் எங்கு சென்றீர்கள் என்றால் நான் நேரடியாக வனச்சரக அலுவலகத்திற்கு சென்றேன்.

மரங்களை குறியீடு செய்வதற்கு எந்த கலர் மையினை பயன்படுத்துவீர்கள் என்றால் சிவப்பு நிற மையை பயன்படுத்துவோம். நீங்கள் குறியீடு செய்துள்ளதாக சொல்லும் கட்டைகள் என்ன நிறத்தில் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் வெள்ளை நிறத்தில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதனால் வெள்ளை நிறத்தினை பயன்படுத்தினோம் என்றால் அந்த கட்டைகள் பிரௌன் நிறத்தில் இருப்பதால் வெள்ளை நிறத்தை நாங்கள் பயன்படுத்தினோம். மேற்படி விபரத்தை சொல்லி நீங்கள் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது. மேற்படி விபரங்கள் அனைத்தும் உங்கள் அதிகாரிக்கு தெரியும் என்றால் சரிதான். நீங்கள் சம்பவ இடத்திற்கு

எத்தனை மணிக்கு சென்றீர்கள், எவ்வளவு நேரம் இருந்தீர்கள் என்றால் 04.45 மணிக்கு சென்றேன். 06.00 மணி வரை இருந்தேன். நீங்கள் எதில் சென்றீர்கள் என்றால் நானும், வனக்காப்பாளரும் இருசக்கர வாகனத்தில் சென்றோம். மற்ற அனைவரும் நான்கு சக்கர வாகனத்தில் சென்றார்கள். அந்த வாகனம் யாருடைய வாகனம் என்று தெரியாது என்றால் சரிதான்.

நீங்கள் செல்வதற்கு முன்பாக புகார் கொடுத்த விபரங்கள் உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், சென்றபின்பு தான் தெரியும். நீங்கள் வனச்சரக அலுவலகத்திற்கு சென்றபோது யார், யார் இருந்தார்கள் என்றால் திரு. பிச்சை வனவர், கன்னிவாடி பிரிவு, திரு. மகேந்திரன், செம்பட்டி பிரிவு வனவர், திரு. சேர்வராயன் கன்னிவாடி பீட் வனக்காப்பாளர், திரு. சாமிக்கண்ணு வனக்காவலர், திரு. முருகையா வனக்காப்பாளர் மற்றும் வனச்சரகர் ஆகியோர் இருந்தார்கள். வேறு யாரும் இல்லை. எத்தனை மணிக்கு வனச்சரக அலுவலகத்திற்கு சென்றீர்கள் என்றால் 02.30 மணியைபோல சென்றேன். நீங்கள் வனச்சரக அலுவலகத்திற்கு எதில் சென்றீர்கள் என்றால் இருசக்கர வாகனத்தில் சென்றேன்.

உங்களுக்கு தகவல் கிடைத்தவுடன் வனச்சரக அலுவலகத்திற்கு சென்றுவிட்டீர்கள் என்றால் சரிதான். நீங்கள் உட்கார்ந்திருந்த உட்கார்ந்திருந்த இடத்தில் இருந்து கன்னிவாடி வனச்சரக அலுவலகம் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 200 மீட்டர் க்குள் இருக்கும். மேற்சொன்ன 5 நபர்களும் உங்களுக்கு முன்பாகவே வனச்சரக அலுவலகத்தில் இருந்தார்கள் என்றால் சரிதான்.

சம்பவம் நடந்த இடம் வாகனங்கள் செல்ல முடியாத இடம் என்றால் சரிதான். 407 வாகனத்தை நிறுத்தியிருந்த இடத்திற்கும் சம்பவ

இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சரியாக நினைவில்லை. சம்பவம் நடந்த ராஜாராம் என்பவரின் காடு எவ்வளவு சுற்றளவு என்றால் தெரியாது. சம்பவ இடத்தின் உரிமையாளர் மரங்கள் அனைத்தையும் அனுமதி பெறாமல் வெட்டிவிட்டு, அந்த மரங்களை வெட்டியது குற்றம் என்று பின்னிட்டு தெரிந்துகொண்ட பிறகு, பொய்யான புகாரை உற்பத்தி செய்து இந்த எதிரிகள் மீது பொய்யாக இந்த வழக்கு புனையப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

கைப்பற்றப்பட்ட பிடிபொருட்களின் நீளம், அகலம் தெரியுமா என்றால் தெரியாது. கைப்பற்றப்பட்ட ரம்பத்தின் கைப்பிடி நிறம், அறுவாளின் கைப்பிடி நிறம் தெரியுமா என்றால் தெரியாது. எத்தனை பொருட்கள் கைப்பற்றப்பட்டது என்றால் 5 பொருட்கள் கைப்பற்றப்பட்டது. அந்த 5 பொருட்கள் என்ன என்ன பொருட்கள் என்றால் 2 ரம்பம், 1 அறுவாள், 2 கோடாரி ஆகும். மேற்சொன்ன அறுவாள், ரம்பம், கோடாரியை யார், யார் பயன்படுத்தினார்கள் என்று உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் நீங்கள் எவ்வளவு நேரம் இருந்தீர்கள் என்றால் மாலை 06.00 மணி வரை இருந்தேன். சம்பவ இடம் வெளிச்சம் இல்லாத பகுதி என்றால் சரிதான். 06.00 மணிக்குள் நாங்கள் வெளியே வந்துவிட்டோம். சம்பவ இடத்திலிருந்து எத்தனை நபர்கள் வந்தீர்கள் என்றால் எதிரியுடன் சேர்த்து மொத்தம் 14 பேர் வந்துவிட்டோம். அனைவரும் அந்த இடத்திலிருந்து வந்துவிட்டோம். மரங்களை கொண்டு வந்தீர்களா என்றால் இல்லை. அந்த இடத்தின் உரிமையாளரிடமே வைத்திருக்க சொல்லி ஒப்படைத்து வந்துவிட்டோம்.

ஸ்தல மகசரில் கையொப்பம் எங்கு வைத்து செய்தீர்கள் என்றால் சம்பவ இடத்தில் வைத்து செய்தேன். ஸ்தல மகசரை யார் எழுதினார்கள்

என்றால் நான் தான் தயார் செய்தேன். ஸ்தல மகசரில் நான்கு மால்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஸ்தல மகசரில் எந்த சர்வே எண் என்றும், எந்த பகுதியில் மரங்கள் வெட்டப்பட்டது என்றும் திசை குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மரங்கள் எந்த தேதியில் வெட்டப்பட்டது என்று தேதி புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1வது எதிரி யாரிடமும் வாக்குமூலம் தரவில்லை என்றும், நீங்கள் சொன்ன மாதிரி, சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க வனச்சரக அலுவலகத்தில் வைத்து கையொப்பம் செய்து விட்டு பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. 1வது எதிரி வாக்குமூலத்தின் அடிப்படையில் மற்ற எதிரிகளை சேர்த்துள்ளதாக நீங்கள் கூறியுள்ளது பொய் என்றால் சரியல்ல.

**3, 4, 5, 7, 9, 10, 11 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1வது எதிரியின் வழக்கறிஞர் மேற்கொண்ட குறுக்கு விசாரணையை 3, 4, 5, 7, 9, 10, 11 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஏற்றுக்கொள்கிறார். மேலும், கூடுதலாக குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

புகார்தாரர் ராஜாராமுக்கு தோணிமலை பகுதியில் நிறைய நிலங்கள் உள்ளது என்றால் இருக்கலாம் எனக்கு தெரியவில்லை. உரிமையாளரின் நிலத்தில் எந்த பகுதியில் இந்த மரங்கள் வெட்டப்பட்டது என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். நீங்கள் சென்றபோது எதிரிகள் யாரும் இல்லை என்றால் சரியல்ல.

**2 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1வது எதிரியின் வழக்கறிஞர் மேற்கொண்ட குறுக்கு விசாரணை மற்றும் 2வது எதிரி தரப்பில் மேற்கொண்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.

**14வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1வது எதிரியின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் 14 வது எதிரியை எந்த அடிப்படையில் சேர்த்துள்ளீர்கள் என்றால் 14 வது எதிரியை திரு. வடிவேல், வனச்சரக அலுவலர் விசாரித்ததன் பேரில் தனிப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் 14 வது எதிரியை சேர்த்துள்ளார். குற்ற நிகழ்விடத்திலோ, வழக்கு சம்பவத்திலோ நேரடியாக 14வது எதிரி இல்லை என்றால் சரிதான். 1வது எதிரியிடம் வாங்கிய குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் 14 வது எதிரி மரங்கள் தனக்கு விலைக்கு வேண்டும் என்று கேட்டதாக தான் 1வது எதிரி கூறியுள்ளார் என்றால் சரிதான். 14வது எதிரிக்கு எந்த வித நேரடி தொடர்பும் இந்த வழக்கில் கிடையாது என்றால் சரிதான்.

சம்பவ இடத்தில் மொத்த குற்றவாளிகள் 12 பேர் தான் என்று பட்டியல் தயார் செய்து, பின்னர் 14 வது எதிரியை சேர்த்ததற்கு எந்த விளக்கமும் குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 14வது எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor